**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் வியாழக்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 12 ஆம் நாள்)**

**அ.வ.எண் : 160/2025**
**[CNR No : TNDG07 - 000593 – 2025]**

பழனி வட்டம், நெய்க்காரபட்டி, லட்சுமன்நாயக்கர் தெரு, கதவு எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் ராமசுப்பு என்பவரின் மகன் சுமார் 46 வயதுள்ள R.கார்த்திகேயன்
--- வாதி

எதிர்

நிலக்கோட்டை வட்டம், நிலக்கோட்டை டவுன், 7வது வார்டு, கதவு எண்.7–1–50A என்ற முகவரியில் வசிக்கும் முனியாண்டி என்பவரின் மகன் சுமார் 48 வயதுள்ள M.ஜெகநாதன் --- பிரதிவாதி

தாவாத் தொகை ரூ.4,49,600/–ம் வாதிக்கு, பிரதிவாதியால் கிடைக்கும்படி கோரியும், மேற்படி தாவா அசல் தொகை ரூ.4,00,000/–க்கு தாவாத் தேதி முதல் 12 சதவீதம் பின்வட்டியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மதிப்பு விபரம் :–** ரூ.4,49,600/–. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.13488/– பிரிவு 22ன்படி கட்டப்பட்டுள்ளது.

வழக்கு மூலம் : 15.07.2024. 16.07.2025 மற்றும் 19.07.2025
வழக்கு தாக்கல் செய்த நாள் : 29.07.2025

இந்த வழக்கானது 30.07.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 05.03.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் R.சுப்பிரமணியன் மற்றும் T.ரமேஷ் ஆகியோர் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் T.தண்டபாணி அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் தோன்றாத்தரப்பினராக இருந்தும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
அ.வ.எண்.160/2025

**தீர்ப்பாணை**

1. இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி, வாதிக்கு கடன் தொகையான ரூ.4,49,600/-யையும், அசல் தொகையான ரூ.4,00,000/-க்கு தாவா தாக்கல் செய்த தேதியான 29.07.2025ஆம் தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9 சதவீதவட்டி செலுத்த வேண்டுமென்றும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை 6 சதவீதம் பின்வட்டி செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிடப்படுகிறது.

2. தாவா செலவுத் தொகையாக வாதிக்கு, பிரதிவாதி ரூ.17,091/- செலுத்திவைக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**செலவுத் தொகை விபரம்**

| | வாதிக்கு | |
|---|---|---|
| | ரூ. | பை |
| 1. நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | 13488 | .00 |
| 2. விண்ணப்பத்திற்கு | --- | --- |
| 3. வக்காலத்திற்கு | 10 | .00 |
| 4. வழக்கறிஞர் கட்டணம் | 3523 | .00 |
| 5. கட்டளை சேர்ப்பிக்க | 35 | .00 |
| 6. கட்டளை தயாரிக்க | 10 | .00 |
| 7. ஆதரவுகளுக்கான வில்லை | --- | --- |
| 8. வாதுரைக் கட்டணம் | 25 | .00 |
| | **17091** | **.00** |

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் நாளிட்ட தீர்ப்பாணையில் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.04.08 17:40:47 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**